சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – 2011–2012–ஆம் கல்வியாண்டு எம்.இ./எம்.டெக்./ எம்.ஆர்க்/எம்.பிளான் பட்ட மேற்படிப்புக்கான மாணவர் சேர்க்கை – சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கலந்தாய்வின் போது தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களிடம் தொடக்கக் கட்டணம் வசூலிப்பது – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (ஜே2) துறை

அரசு ஆணை (1டி) எண்.55

நாள்:22.03.2011
பங்குனி 8
திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்கப்பட்டவை:

1) அரசாணை (வாலாயம்) எண்.9, உயர்கல்வி (ஜே2) துறை, நாள் 1.2.2011.
2) சென்னை, அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தரின் நே.மு.க. எண்.0303/EA4/TANCA/2011, நாள் 25.2.2011.

------

ஆணை:

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை, அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளவாறு 2011–2012 ஆம் கல்வியாண்டிற்கான எம்.இ. / எம்.டெக். / எம்.ஆர்க். / எம்.பிளான் முதலான பட்ட மேற்படிப்புகளுக்கான கலந்தாய்வின்போது தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களிடமிருந்து கல்விக்கட்டணத்தின் ஒருபகுதியாக தொடக்கக் கட்டணமாக தமிழ்நாட்டைச் சேர்ந்த பட்டியலினம் மற்றும் பழங்குடியின மாணவர்களிடமிருந்து ரூ.1000/–மும் பிற மாணவர்களிடமிருந்து ரூ.5000/–மும் வசூலிக்க சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும் அவ்வாறு வசூலிக்கப்படும் கட்டணத்தை மாணவர்கள் அந்தந்த கல்லூரிகளில் சேர்ந்தபிறகு அக்கல்லூரிகளுக்கு திரும்ப செலுத்துமாறு சென்னை, அண்ணா பல்கலைக்கழகம் அறிவுறுத்தப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25.
செயலாளர், மாணவர் சேர்க்கை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25.

தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
பதிவாளர், அண்ணா தொழில் நுட்ப பல்கலைக்கழகம், சென்னை / திருச்சிராப்பள்ளி / கோயம்புத்தூர் / திருநெல்வேலி / மதுரை.
அரசு / அரசு உதவிபெறும் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகள் (தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25 வழியாக)

நகல்

செயலாளர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை, சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இ.கோ./உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சே. பூவதி அம்மாள் 23/3/11
பிரிவு அலுவலர்.
23/3/11